**பெந்தோடை பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்டம்பர் 04 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து, பெந்தோட்டை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களை சமர்பித்தல்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) உள்ளூராட்சி ஒய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டி ரூபா 4,537,005 இற்காக பங்களிப்பு தொகையினை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்திருக்காமையினால் ஆண்டிற்கான செலவுகள் மற்றும் நடைமுறை பொறுப்புக்கள் மேற்கூறிய பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நூலக புத்தகங்கள் கொள்வனவு செய்த போது பெற்ற கழிவு ரூபா 155,644 தொகையினை கணக்கீடு செய்திருக்காமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் சொத்துக்கள் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) 2015 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் பௌதீக ரீதியாக காணப்படுவதாக உறுதி செய்யப்பட்ட 55 இருப்பு அலகுகளின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்காமையினால் நடைமுறை சொத்துக்கள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) களஞ்சியத்தில் காணப்படுவதாகவும் மற்றும் ஆவணங்கள் மூலம் காணப்படுவதாகவும் உறுதிபடுத்தப்படாத ரூபா 68,304 தொகைக்கான 04 நிர்மாண வேலை இருப்பு விடயங்கள் தொடர்பாக உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் 92,337 இற்கான முற்கொடுப்பனவு காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அமயங்கொட ஒவிட என்னும் காணியினை ஏல விற்பனை செய்யும் போது பொது வசதிகளுக்காக சபைக்கு வழங்கியியருந்த 40.75 காணி பங்கின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்காமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத்தொகை கணக்கு குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை 12,150,417 தொகைக்கான 05 கணக்கு விடயங்களுக்கான மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துனை பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத் தொகை ரூபா 846,517 தொகையான சமமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 2011 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 11,559,208 தொகையான 33 கடன்பட்டோர் மீதிகளை மீளாய்வண்டின் போதும் தீர்திருக்கவில்லை.

(ஆ) 2001 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக சபைக்கு அறவிடப்பட வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 1,788,951 தொகைக்கான முத்திரை கட்டணத்தை அறவீடு செய்திருக்கவில்லை.

(இ) 2009 ஆண்டு தொடர்பான ரூபா 104,000 தொகையான சம்பள மீளளிப்பு மற்றும் 2012 ஆண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 53,833 தொகையினை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 3,192,252 தொகையான 06 பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியினை தீர்த்திருக்கவில்லை.

(உ) கூட்டுத்தொகை ரூபா 13,432,508 தொகைக்கான கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

நிதிக்கூற்றுகளில் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 118,153,755 தொகைக்கான 05 நிலையான சொத்து விடயங்கள் தொடர்பாக முறைசார் விதமாக மற்றும் நாளது வரையாக தயாரிக்கப்பட்ட காணிகள் மற்றும் கட்டிடங்கள் பதிவேடு, நாளது வரையாக்கப்பட்ட சொத்துக்களின் வகுப்பு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் ரூபா 1,447,524 தொகைக்கான கையிருப்பு தொடர்பாக நாளது வரையாக்கப்பட்ட இருப்பு பதிவேடு சமர்பிக்கபடாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| இலங்கை குடியரசு நிதிப் பிரமாணங்கள் 371 (2) (ஆ) | 1993 ஆண்டு முதல் முன் கொண்டு வரப்பட்டு காணப்படும் ரூபா 159,278 தொகைக்கான பொதுவான முற்பண மீதியை தீர்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கபட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 29,686,524 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,950,973 தொகையாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 16,735,551 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

### 2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

முன்னைய ஆண்டுடன் மீளாய்வாண்டின் நிலைமையயை இணக்கம் செய்த போது நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரங்களில் திருப்திகரமான நிலைமை ஒன்றினை காட்டிய போதிலும், 03 வருடங்கள் 05 வருட இடைப்பட்ட செல்லுபடியாகும் காலம் கடந்துள்ள ரூபா 15,848,159 இற்கான கடன்பட்டோர் மீதிகள் காணப்படாமையால் அந்த விகிதாசாரங்களின் திரவத்தன்மையொன்று காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வீத வரி

மீளாய்வண்டின் போது அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 11,747,533 தொகை வீதவரித் தொகையில் ஆண்டின் போது 68 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவைத்தொகை ரூபா 3,776,359 தொகை வரை உயர்ந்த பெறுமதியினைக் கொண்டிருந்தது.

#### 2.3.2 ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் போது ரூபா 155,503 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும், ஆண்டின் போது அறவிடப்பட்டவை ரூபா 3,518 தொகை எனப்படும் 2 சதவீதமான குறைந்த பெறுமதியினைக் கெண்டிருந்தது. இதன் காரணமாக வருட இறுதியில் உள்ளவாறு நிலுவைத் தொகை ரூபா 151,985 தொகையாக இருந்தது.

#### 2.3.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகடமிருந்து 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,116,180 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 38,664,949 இற்கான முத்திரைக்கட்டணம் என்பன கிடைக்க வேண்டியிருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதவியணி திட்டத்தின் பிரகாரம் 18 ஆகக் காணப்பட்ட மிகைப் பதவியணியை முறைபடுத்துவதற்கும், 07 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஓய்வு பெற்ற, பதவியை விட்டு விளகிய மற்றும் இறந்த 27 உத்தியோகத்தர்களிடம் நீண்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 96,375

தொகைக்கான கடன் மீதியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) உள்ளுராட்சி ஆணையாளரிடம் கிடைக்க வேண்டிய ரூபா 164,500 தொகைக்கான ஆதனக் கடன் மீளளிப்புத் தொகை 2007 ஆண்டு முதல் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 07 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக 1987 முதல் 1991 வரையான காலப்பகுதியில் கிடைத்திருந்த ரூபா 285,712 இற்கான தொகை உரிய செயற்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படாமல் 2016 ஆண்டின் போது வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(உ) 2014 ஆண்டு தொடர்பாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 14,871 இற்கான பங்களிப்பு தொகை மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்பு தொகை ரூபா 15,527 அந் நிதியங்களுக்கு அனுப்படாமல் பொது வைப்பு கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2016 ஆண்டின் எல்லா மாதங்களிலும் இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கில் சராசரி மாதாந்த மீதி ரூபா 03 மில்லியனை மிகைத்துக் காணப்பட்டதுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 171 மற்றும் 184 இன் பிரகாரம் அப் பணத்தை முதலீடு செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(எ) (i) மீளாய்வாண்டிற்காக பண்டக் கணிப்பீட்டு விடயங்கள் 2017 மே 31 ஆம் திகதி வரையும் பூர்த்தி செய்திருக்கவில்லை.

(ii) 2015 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு சபையினால் இனங்காணப்பட்ட கணிப்பிட்டிற்குச் சமர்பிக்கப்படாத 984 பண்டங்கள், பற்றாக்குறை மற்றும் மிகையானவை என இனங்காணப்பட்ட 145 பண்டங்கள் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ஏ) (i) உள்ளுராட்சி திணைக்களத்தில் இருந்து வழங்கியிருந்த 20 லீற்றர் கொள்ளவான 16 குப்பை பாத்திரங்கள் மற்றும் 60 லீற்றர் கொள்ளவான 10 குப்பை பாத்திரங்கள் எதுவித பயன்தரு கருமத்திற்கும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

(ii) தனியார் நிறுவனமொன்றில் இருந்து சேதனப் பசளை உற்பத்திக்காக 2007 ஆண்டின் போது வழங்கியிருந்த ரூபா 91,000 கிரயத்தை உடைய இரண்டு இயந்திரங்கள் மற்றும் ரூபா 108,000 கிரயத்தை உடைய கைடிரக்டர் என்பவற்றை எதுவித பயன்தரு கருமங்களுக்கும் பயன்படுத்தாமல் 10 வருடங்களை விட மிகையான காலம் செயற்படாது காணப்பட்டது.

**3.2 செயற்பாட்டு திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

**(அ) வீதி விளக்குகள் பராமரிப்பு**

மின்சார சபையுடன் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை 2015 ஆண்டில் காலவதியாகியிருந்த போதிலும், மின்சார சபையின் பிராந்திய பொறியியலாளரின் லீ/10/ வீதி விளக்கு இலக்கம் கொண்ட 2016 ஜுன் 07 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் உடன்படிக்கை மேற்கொண்டிருக்காமையால் 2014 ஆண்டின் பின்னர் வீதி விளக்குகளுக்கான மீளளிப்புகள் கிடைத்திருக்கவில்லை.

**(ஆ) ஏல விற்பனை காணிகளில் இருந்து பொது வசதிகள் வழங்குவதற்காக காணிகள் பெறல்**

---

2016 ஆண்டின் போது தனியார் நிறுவன மொன்றினால் 05 ஏக்கர் 02 ரூட் 31 பர்சஸ் பரப்பளவான காணியொன்றினை துண்டுகள் பகிர்ந்து ஏல விற்பனை செய்த போது பொது வசதிகள் வழங்குவதற்காக சபைக்கு ஒதுக்கப்பட்ட காணி பகுதியை பெற்று கொள்வதற்கு முன்னர் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய காணிப் பகுதி கிடைத்திருக்கவில்லை.

**(இ) சுற்றுாலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல்களின் வருமானத்தில் இருந்து 1% வரி அறவீடு செய்தல்.**

---

1987 இன் 15 இன் பிரதேச சபை சட்டத்தின பிரிவு 149 இன் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள ஹோட்டல்கள், சிற்றுண்டிசாலைகள் ,தங்குமிடங்களின் வருமானத்தின் மீது அறவிடப்படும் 1 சதவீத வரி அறவீடு செய்யும் போது 18 ஹோட்டல்களில் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் சமர்பிக்கப்பட்டிருக்காததுடன், ஹோட்டல்களினால் வழங்கியிருந்த வருமானத்தின் மீது உரிய கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

**3.3 செயற்திட்டங்கள் தாமதித்தல்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) பிரதேச சபைகளை வலுபடுத்தும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் 2016 ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த 08 செயற்திட்டங்களில் 05 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெருந் தெருக்கள் மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சிலிருந்து அதுருவெல்ல இம்புல்கஹவத்த பாதையின் ஒரு பகுதி 03 மீற்றர் அகலம் 156 மீற்றர் நீளமுள்ள பகுதிக்காக முற் தயாரிப்புக் கற்கள் பதிவதற்காக 2014 ஆண்டில் அங்கிகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,000,000 தொகை 2014 திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமையால் இரத்து செய்யப்பட்டதென உரிய அமைச்சினால் 2015 ஜனவரி 20 திகதி அறிவிக்கப்பட்டிருந்தது.

**3.4 திண்ம கழிவு பொருள் முகாமைத்துவம்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குப்பைகளை அகற்றுவதற்காக முறையாக நடைமுறையொன்று காணப்படாததுடன், நாளாந்தம் சேகரிக்கப்படும் ஐம்புகஹபிடிய வத்த எனப்படும் காணி ஒன்றில் போடப்பட்டு, மண் போடப்பட்டு மூடப்பட்ட போதிலும், உரிய முறையில் மண் போடப்படாமையினால், காணியில் குப்பை குவிக்கப்படுவதினால் நுளம்புகள் மற்றும் கொசுக்களின் அடர்த்தி அதிகரித்திருந்தமையால் அதிகாரப் பிரதேச மக்களின் சுகாதார தொடர்பான ஆபத்து ஒன்று காணப்பட்டது.

(ஆ) பிரதேச சபை சட்டத்தின் 93,94 மற்றும் 95 ஆகிய பிரிவுகளின் பிரகாரம் சபையின் அதிகார பிரதேசத்தின் குப்பைகள் தொடர்பாக முற் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளல் தெடர்பாக வேலைத் திட்டம் ஏதும் சபையில் காணப்படவில்லை.

(இ) குப்பைகள் குவிக்கப்படும் வளவிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

## 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டில் அடங்கியுள்ள 06 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 30,537,603 இற்கான சேமிப்பும், வேறு 02 செலவு விடயங்களில் ரூபா 162,363 இற்கான பிரதிகூலமான முரண்களும், 02 வருமான விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 2,785,995 தொகைக்கான நெருங்கி இருக்காத இலக்கு வருமானமும் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தபடவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் (தென் மாகாண) இன் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதி தபபா/யஹ/01/நா.ச.லே சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் செயற்படுதல்

2009 ஜுன் 09 ஆந் திகதி DMA/2009 (i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.4 தீர்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 2.2.2 ஆம் இலக்க பந்தியில் (ஆ), (இ), (ஈ) மற்றும் (ஐ) ஆகிய பந்திகளில் சுட்டிக் காட்டியிருந்த குறைபாடுகள் தீர்ப்பதற்காக இணங்கியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை இணங்கிய பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் | முறைமையில் முக்கிய குறைபாடுகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் | (i) இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு இற்றைவரைப்படுத்தியிருக்கவில்லை. |
| | (ii) சேதனப் பசளை உற்பத்தி இயந்திரத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) வருமானம் சேகரித்தல் | (i) நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் நிலுவை மீதி உயர்ந்த பெறுமதியினை கொண்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (iii) | நிலுவை வருமானம் தொடர்பான காலப்பகுப்பாய்வு தயாரிக்காமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானங்களில் நிலுவை காலத்தை இனங் காண்பதற்கு முடியாதிருந்தது. |
| (இ) | கணக்கீடு | (i) | நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளிடையே வித்தியாசங்கள் காணப்பட்டன. |
| | | (ii) | நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டு வரப்படும் மீதிகள் தொடர்பாக கவனம் செலுத்தி அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (iii) | சில வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை. |
| (ஈ) | பணியாளர் குழு முகாமைத்துவம் | | மிகையான பதவிகளை முறைப்படுத்துவதற்கும் வெற்றிடங்கள் நிரப்பிக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (உ) | ஒப்பந்த நிருவாகம் மற்றும் செயற்திட்டங்கள் தாமதம் செய்தல் | (i) | உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |
| | | (ii) | சபைக்கு கிடைத்திருந்த செயற்திட்டங்களை குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறைவேற்றியிருக்க வில்லை. |
| (ஊ) | திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் | (i) | குப்பைகள் வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்பட்டிருக்கவில்லை |
| | | (ii) | பிரதேச மக்களின் சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் குப்பைகள் அகற்றப்பட்டிருக்கவில்லை. |
| | | (iii) | குப்பையின் அளவினை குறைப்பதற்குப் பொருத்தமான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தியிருக்கவில்லை. |
| | | (iv) | குப்பைகள் குவிக்கப்படும் காணிக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. |